கொண்டு உடல் நலத்தைக் காக்கும் சக்தி பெறுவதில்லை. ஆனாலும், இந்த அளவுக்கு காமாலை நோயைக் கட்டுப்படுத்தியிருப்பதற்கு நாம் இந்தத் துறையில் பணியாற்றியவர்களுக்குப் பாராட்டுத் தெரிவிக்க வேண்டும்.

திரு. எம். சுரேந்திரன் : சார், இந்த மஞ்சள் காமாலை வியாதியை ஸ்வஸ்தப் படுத்த அலோபதி முறையில் நல்ல மருந்துகள் இல்லை என்றும், ஆயுர்வேத முறையில் தழைகளைக் கொண்டு அதன்மூலம் சிகிச்சை செய்கிறார்கள் என்றும் சொல்லுகிறார்களே. ஆகவே, ஆயுர்வேத முறையில் ஸ்வஸ்தமாக்க ஊக்கம் அளிக்கப்படுமா, அந்த யோசனையை அமைச்சர் செயல்படுத்துவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அப்படி ஆயுர்வேதம், சித்த முறைகளில் உபயோகிப்பதில், கரிசலாங்கண்ணி என்கிற மூலிகை மூலம் மருத்துவம் செய்யப்படுகிறது. அலபதி முறையிலும், இந்தக் கரிசலாங்கண்ணி மூலிகையைக் கொண்டு தயாரிக்கப்பட்ட மருந்துகளையோ, சாரையோ மருந்துக்காக வழங்கப்படுகிறது என்பது கடந்த 5, 6 ஆண்டுக்காலமாகச் செல்வாக்கு பெற்றிருக்கிறது. ஆனாலும், குறிப்பிட்ட கட்டங்களில் வேறு சில மருந்துகளும் தேவைப்படுகின்றன. அந்த மருந்துகளைக் கொடுத்து, தாங்கும் சக்தியை உண்டாக்கி, அதன்மூலம் சிகிச்சை செய்யப்படுகிறது.

பழைய ஜெயங்கொண்டானுக்கு மருந்தகம்

*504 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலை வட்டம், பழைய ஜெயங்கொண்டத்தில் ஒன்றியத்தின் மூலம் மருந்தகம் துவக்க எப்போது தீர்மானிக்கப்பட்டது?

(இ) இதுவரை மருந்தகம் துவக்கப்படாததற்குக் காரணம் யாது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) 1969-ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் உத்திரவிடப்பட்டது.

(இ) ஒன்றியத்தின் நிதி நிலைப் பற்றாக்குறையின் காரணமாக மருந்தகம் துவக்கப்படவில்லை.

Poultry Development

*505 Q.—Thiru S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether any new scheme for Poultry Development has been introduced in Chingleput District; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள படப்பை, சித்தலப்பாக்கம், பஞ்சாயத்து ஒன்றிப்புகளில், கோழி வளர்ப்போர் சங்கம் அமைத்து வர்த்தக வங்கிகள்மூலம் அவர்களுக்கு உதவியளிக்கும் திட்டம் ஒன்றினை அரசு இவ்வருடம் செயல்படுத்த ஒப்பளிப்பு வழங்கியுள்ளது படப்பையில் கிராம வளர்ச்சி முகாம் ஒன்று நடத்தப்பட்டு, அங்கு கோழி வளர்ப்போருக்கு மானிய உதவியோடு கோழிகள் விற்கப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[1971 டிசம்பர் 17

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்தை எடுத்துக் கொண்டால், தேவைக்கு ஏற்ற அளவில் . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வியைக் கேளுங்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தேவைக்கு ஏற்ற அளவில் முட்டை உற்பத்தி இல்லாமல் குறைந்திருக்கிறது. தேவைக்கு ஏற்ற அளவில் உற்பத்தி செய்யத் திட்டம் வகுத்து, கோழிகளை வளர்க்க அரசாங்கம் முற்படுமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அரசாங்கம் அண்மை யில் தீவிரக் கவனம் செலுத்திவருகிறது இந்தத் துறையில், என்பது உண்மை. அதன் காரணமாக, பல்வேறு மாவட்டங்களில் கிராமப் பகுதிகளிலும் கோழி வளர்ப்புத் திட்டத்தை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட் டிருக்கிறது. ஒவ்வொரு பகுதியிலும், 50 கோழிகள் வளர்க்கும் ஐந்து பேர் களுக்கு, எட்டிலிருந்து, 12 வாரம் வரை உள்ள பெட்டைக் குஞ்சுகளும், சேவலும், ஒவ்வொருவருக்கும் ரூ. 2 அளவில் ஆதரவுத் தொகையாக வழங்கப் படுகிறது. பஞ்சாயத்து ஒன்றிப்பு மானியத்திலிருந்து 50 கோழி வைத் திருக்கும் ஒவ்வொருவருக்கும், அதே முறையில் ரூ. 10-க்கு விற்கப்படுகிறது. அதற்கும் மேல் 300 கோழி வைத்திருக்கும் ஒவ்வொருவருக்கும் 5 நபர்களுக்கு ஒவ்வொருவருக்கும் ரூ. 100 என்றும், பஞ்சாயத்து ஒன்றிப்பு மானியத்திலிருந்து வழங்கப்படுகிறது. இப்படிச் சில திட்டங்கள் 'பாக்யார்ட் பௌல்ட்ரி' என்ற அளவில் கோழி வளர்ப்பைப் பெருக்கவும் முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. பொது மக்கள் இவற்றிற்கு ஆர்வம் காட்டினால் ஓரளவு வளர்ச்சி காணமுடியும்.

*506 Q.—THIRU R. R. MUNUSWAMY : Will the Hon. the Minister for Public Health be pleased to state whether it is a fact that the poultry market in this State is being monopolised by supply from Kerala State?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இம்மாநிலத்தில் உற்பத்தியாகும் முட்டைகள் இம்மாநிலத்தின் தேவைக்கும் மிகக் குறைவாகவே உள்ளது. இத் தேவையை நிறைவேற்ற வெளிமாநிலங்களிலிருந்து வரும் முட்டைகளில், 97.3% கேரள மாநிலத்திலிருந்து கொண்டுவரப்படுகின்றன.

திரு. ரா. ரா. முனுசாமி : தலைவர் அவர்களே, கேரள மாநிலத்திலிருந்து வரும் முட்டைகள் தரமின்றி, கெட்டுவிட்ட முட்டைகளையும் ஏற்றுமதி செய் கிறார்கள் என்கிற புகார் வருகிறதே. அதைப்பற்றிச் சர்க்கார் நடவடிக்கை எடுத்து ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இதைப்பற்றிப் புகார் எனக்கு இதுவரையில் கிடைக்கவில்லை. கூடுமான வரையில் அந்த அந்தத் துறையில் உள்ளவர்கள் முறையாக நடக்கிறது என்றுதான் தெரிவித்திருக் கிறார்கள். சில நேரங்களில் கிராமப் பகுதிகளிலிருந்து முட்டைகளை வாங்கி அனுப்பும்போது, வழியில் அவை கெட்டிருக்கலாம். திட்டவட்டமாகப் புகார் ஏதாவது இருந்து, தெரிவித்தால், அதைப்பற்றி அரசு ஆராய்ந்து ஆவன செய்யும்.